**R4811**

# A GOD READY TO PARDON
# வெகுவாய் மன்னிக்கிற தேவன்

ஓசியா 14

"ஆகிலும் வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மன உருக்கமும் உடைய தேவன்." (நெகேமியா9:17)

இன்றைய பாடம் தீர்க்கதரிசி ஓசியா இஸ்ரயேலுக்கு கொடுத்த அறிவுரையைப் பற்றியதாகும். அந்த சமயத்தில் இஸ்ரயேல் யூதாவிடமிருந்து பிரிந்து இருந்தது. ஆனால் அது நமது தேசத்திற்கும் ஒவ்வொரு தேசத்திற்கும் பொருந்தக் கூடியது. இஸ்ரயேல் தேசம் விக்கிரக ஆராதனை மூலம் கெடுக்கப்பட்டிருந்தது. புறஜாதி தேசங்களுடனான கலப்பு திருமணம் புறஜாதி மதங்களின் விக்கிரக ஆராதனையை புகுத்தியிருந்தது. சிற்றின்பங்கள் ஜனங்களின் ஈர்க்கும் அம்சங்களாக இருந்தன. சிற்றின்பத்துடன் நீதிநெறியின் குறைபாடும் வந்தது. அசுத்தங்களைப் பற்றிய உணர்வே இல்லாதிருந்தது. ஓசியாவின் மனைவியே ஒரு விபச்சாரி என்று பதிவு குறிப்பிடுகிறது. அவள் முடிவில் தனது கணவனையும் தவறான பிள்ளைகளையும் விட்டு பிரிந்தாள். பின்னர் தீர்க்கதரிசி அவளைத்தன் கூரையின் கீழ் சேர்த்துக் கொண்டார். ஆனால் மனைவியாக அல்ல. அவர் அவளிடமும் அவளது குழந்தைகளிடமும் பட்சமாயிருந்தார்.

தீர்க்கதரிசியின் சொந்த அனுபவம், அவரது சொந்த ஜனங்களின் மோசமான நிலையை உணரும்படி விழிக்கச்செய்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தீர்க்கதரிசனத்தில் கர்த்தருடைய ஆவி அவரிடத்தில் வந்த போது, தனது அனுபவத்தின் மூலம் அவர்களுடன் இரக்கம் காண்பித்தார். அவர் இரக்கமும் மனதுருக்கமும் உடையவராக இருந்தார். அவரது செய்தி இன்னும் அதிகப்படியான தெய்வீக இரக்கத்தையும் அனுதாபத்தையும் கூறியது.

**"கர்த்தரிடத்தில் திரும்பு"**

நம்முடைய பாடத்தில் தீர்க்கதரிசி, தனது தேசத்தின் விழுந்து போன நிலைமையையும் உதவியற்ற தன்மையையும் உணர்ந்து, தேவனுடைய கருணையை பிரயோஜனப்படுத்திக் கொள்ளும்படி தனது ஜனங்களை வலியுறுத்துகிறார். அவர்கள் உதவிக்காக அசீரியரை எதிர்பார்க்கக்கூடாது. எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகளை நம்பக்கூடாது. அவர்களது சொந்த கை வேலையாகிய விக்கிரகங்களை இனி நம்பக்கூடாது. மாறாக, அவர்கள், திக்கற்றவனுக்கு இரக்கம் காண்பிக்கிற கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டும். அவர்கள் சிருஷ்டிகராகிய பரலோக பிதாவை மறுதலித்ததால் அவர்கள் தந்தை இல்லாதவர்களாக இருந்தார்கள். சத்துருவின் பிள்ளைகளானார்கள். சிலரிடம் இயேசு கூறியதாவது: "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்." அவர்கள் மனந்திரும்புதலில், கர்த்தரிடத்தில் திரும்புதலில் அவர்கள் தப்பறையான நம்பிக்கைகள் மற்றும் அக்கிரமங்களை மாத்திரம் விட்டு விடாமல், கர்த்தரிடத்தில் வேண்டுதலும் செய்தார்கள். " தேவரீர், எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் கனிகளைச் செலுத்துவோம்." பிறகு, இன்னும் நிறைவேறாத ஒரு தீர்க்கதரிசனம் வருகிறது. அது சீக்கிரம் நிறைவேறும், உணரப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். தேவன் தமது கோபத்தை விட்டு நீங்கி, இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதை குறித்து அது சொல்லுகிறது. மேசியாவின் ராஜ்யத்தின் ஆரம்பத்தில் அது நிறைவேறும்.

**"எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்"**

தீர்க்கதரிசியால் குறிப்பிடப்பட்டது போல, இந்த நாளின் இஸ்ரயேல் ஜனங்கள் கர்த்தரின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது கவனிக்கப்படத்தக்கது. தயவாய் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் கேட்கவில்லை. நியாயப்பிரமாணத்தை கடைபிடிப்பதின் மூலம் தெய்வீக தயவை இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். விழுந்து போன மனுக்குலத்தில் அவர்களாலோ மற்றவர்களாலோ இந்த பிரமாணத்தை எழுத்தின் மூலமாகவோ ஆவியின் மூலமாக கடைபிடிக்க இயலாது. நாம் அனைவரும் விழுந்து போனவர்களாக, அபூரணர்களாக, தெய்வீக தேவைகளை சந்திக்க முடியாதவர்களாகவோ இருக்கிறோம் என்பது கற்றுக் கொள்ளப்பட வேண்டிய மாபெரும் பாடமாக இருக்கிறது. தெய்வீக கிருபை, இரக்கம், அக்கிரமத்திற்காக மன்னிப்பு, அபூரணத்திலிருந்து வெளியில் வர உதவி ஆகியவை நமக்கு தேவைப்படுகிறது என்பதும் அறிய வேண்டிய பாடம். ஓசியாவின் நாட்களில் அறிவிக்கப்படாததை தேவன் எப்படி நமக்கு நீதியாகவும் தெளிவாகவும் அறியப்பண்ணுகிறார். தேவனுடைய அன்பின் "நற்செய்தியின்" சாராம்சம் இப்போது தெளிவாக வைக்கப்பட்டிருக்கிறது. தெய்வீக நீதியின் சரிகட்டுதலுக்கான மீட்கும் பொருளின் பணியை கிறிஸ்துவின் மூலம் தேவனே கொடுத்திருக்கிறார். இந்த நிபந்தனைகள் இருந்தாலும் தேவன் நீதியாகவும் இரக்கமாகவும் இருக்கிறார்.

**"உணரத்தக்க ஞானமுள்ளவன்"**

அதிகாரத்தின் கடைசி வசனம் அறிவிக்கிறதாவது: "இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க புத்தியுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள். பாதகரோவென்றால் அவைகளில் இடறி விழுவார்கள்." தேவனுடைய இரக்கமுள்ள முன்னேற்பாடுகளை தெளிவாக புரிந்து கொள்ளுவதற்கு, மீறுதலுக்கு உள்ளானவர் முதலாவது, தனது சொந்த தேவையை உணர்ந்து, சிருஷ்டிகரின் அங்கீகாரத்திற்காகவும், அவரது இரக்கம் மற்றும் அன்பான முன்னேற்பாடுகளில் ஒரு பங்குக்காகவும் அவரிடம் மன்றாட வேண்டும். திராணிக்குத் தக்கதாக பாவத்தை விட்டுவிடுதல், தேவனில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்த அவருடைய உதவி கிடைக்கும். அனி ஆத்துமாவுக்கு சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் கொண்டு வரும். தெய்வீக இரக்கம் அறியாமல் செய்த கறைகளை நல்லதாக்கி, சகலமும் நன்மைக்கும் ஏதுவாக அவருக்கு நடக்க செய்கிறது என்று உணரச் செய்யும். தெய்வீக தயை, அன்பு, மன்னிப்பு மற்றும் சமாதானம் உடைய பரிசுத்த பெரும்பாதையான வழியில் மீறுபவர்களுக்கு இடமிருக்காது. ஏனெனில் அவர்கள் தேவனுடைய சித்தத்துக்கு மாறாக தெரிந்தே, வேண்டுமென்றே செல்வார்கள்.

## கிறிஸ்தவ மண்டலம் விக்கிரக ஆராதனையில் கெடும்

இந்த பாடத்தை இஸ்ரயேலருக்கு மாத்திரம் பொருத்தி இதன் முக்கியத்துவத்தை இழக்கக்கூடாது. டீர்த்தருக்கு ஊழியம் செய்வதாக கூறிக்கொள்ளுகிற “கிறிஸ்தவ மண்டலம்” என்று அழைக்கப்படும் பெயரளவான ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் இருக்கிறார்கள். வேத வாக்கியங்களில் கிறிஸ்தவ மண்டலம் வேசியாக கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் அது உலகத்தோடு உறவு வைத்துள்ளது. மேலும் அது வீடுகள், நிலங்கள், வங்கிகள், பங்குகள், பேரும் புகழும் போன்றவைகளை ஆராதிப்பதால் விக்கிரராதனைக்காரர்கள் என்றும் குற்றம் சாட்டப்படுகிறார்கள். உண்மையிலேயே கிறிஸ்தவ மண்டலத்திற்கு எதிரான தீவிரமான குற்றம் அதன் தேவனை இழந்ததாகும். சிலர் மட்டுமே, மிகவும் குறைவானவர்களே தேவனை தங்களது பிதாவாகவும், அவர் அவர்களை பிள்ளைகளாகவும் அறிந்திருக்கிறார்கள். “கிறிஸ்தவ மண்டலமானது” தங்களது சொந்த வேலையிலும், லாட்ஜ்கள், மன்றங்கள், டிரஸ்டுகள், காப்பீடுகள், சபை அ ங் க த் து வ ம் மு த ல ா ன வை க ளி ல் ந ம் பி க் கை வைத்திருக்கிறார்கள். “தேவன் அவர்களது சிந்தனைகளில் இல்லை.” இந்த காலத்தில் கிறிஸ்தவ மண்டலத்தின் நிலைமை, படைகள், கப்பற்படை, வீரர்கள் மற்றும் துப்பாக்கிகள், விமானங்கள், வெடி குண்டுகள், மாபெரும் செல்வம் மற்றும் செழுமை ஆகும். லவோதிக்கேயா சபை சித்திரத்தின் கீழாக இன்றைய பேர் சபை, “நான் ஐசுவரியவான் என்றும் திரவிய சம்பன்னனென்றும் எனக்கு ஒரு குறைவுமில்லை என்றும் சொல்லுகிறார்கள்.” கர்த்தர் பதிலுரைப்பதாவது: “நீ நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும் தரித்திரனும் குருடனும் நிர்வாணியுமாயிருக்கிறதை அறியவில்லை. நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே போடப்பட்ட பொன்னையும் உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்ளுவதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்தில் வாங்கிக் கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டும் என்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்.”(வெளிப்படுத்தல் 3:17,18)

## திக்கற்றவர்கள் இரக்கம் பெறுகிறார்கள்

அப்படிப்பட்டவர்கள் அக்கிரமத்தை சிநேகித்து நீதியை வெறுக்கிறர்கள், சத்துருவின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் தயவின் மூலம் சர்வ வல்லவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்க இயலாது. துன்மார்க்கன் சங்கரிக்கப்படுவான். ஆனால் இப்படிப்பட்டவர்கள் பாவத்தை கைவிட்டு, கர்த்தரிடத்தில் திரும்ப விரும்பினால், அவர்கள் திக்கற்றவர்களாக இருக்கிறார்கள். அதாவது அவர்களுக்கு சாத்தானோ அல்லது தேவனோ அவர்களுக்கு பிதாவாக இல்லை. ஆனால் அப்படிப்பட்டவர்களிடத்தில் தேவன், கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தினால் இரக்கத்தையும் மன்னிப்பையும் கொடுக்க விரும்புகிறார். இப்படியாக பாவத்திலிருந்து திரும்புகிற அவர்கள் தெய்வீக தயவை பெறவும், தேவனுடைய பிள்ளைகளாக புத்திர சுவிகாரத்தைப் பெறவும் சரியான நிலைமையில் இருப்பார்கள். “வெகுவாய் மன்னிக்கிறவரும் இரக்கமும், மனஉருக்கமும் மகா கிருபையுமுள்ள தேவன்.”

பாவத்திற்கு எதிரான தேவ கோபம் கடந்த ஆறாயிர வருடங்களாக பாவம், பேரழிவு மற்றும் மரணத்தின் ஆளுகையில் வெளிப்படுத்தப்பட்டிகிறது. மேசியாவின் ராஜ்யம் ஆரம்பிக்கும் போது இந்த சுவிசேஷ யுக முடிவில் மகா ஆபத்தின் நாள் அல்லது தெய்வீக கோபம் கிறிஸ்தவ மண்டலத்தின் மேல் வரும் என்று வேத வாக்கியங்கள் தெளிவாக முன்னறிவிக்கின்றன. பரிசுத்தவான்களாக ஆகி, தேவனுடைய பிரியமான குமாரனின் ராஜ்யத்தில் ஒரு பங்கைப் பெற தங்களது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்துகிறதற்கும் ஆபத்தின் தீவிரத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்கும் இதுவே விசேஷித்த சந்தர்ப்ப காலமாக இருக்கிறது.